**சுருக்கம்**

பணியமைப்பு – கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் பணி நிறைவு பெறும் வயது 60 என நிர்ணயித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.17 நாள் 10.02.2011

படிக்கப்பட்டவை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண். 81107/09/இ2, நாள் 03.05.2010.

---

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் சில மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி / விசை பம்பு இயக்குபவர்களின் ஓய்வு பெறும் வயது 60 என்ற நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும், ஆனால், இப்பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது குறித்து அரசாணை ஏதும் வெளியிடப்படவில்லை எனக் குறிப்பிட்டு இப்பணியாளர்களுக்கு ஓய்வு பெறும் வயதினை 60 என்று நிர்ணயம் செய்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலித்து, கிராம ஊராட்சிகளில் ஊராட்சி பொது நிதியிலிருந்து தொகுப்பூதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களான துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி/ விசை பம்பு இயக்குபவர்கள் ஆகியோரின் பணி நிறைவு பெறும் வயதினை 60 என நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
**நகல்**
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9
நிதி (ஊ.வ) துறை, சென்னை–9
உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்